# கல்லூரி வரலாறு சில குறிப்புகள்

பருகூர் மற்றும் அதன் சுற்று வட்டார கிராமப் பகுதிகளில் உள்ள மாணவிகள் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, மேற்படிப்பு பயில முன்னாள் முதல்வர் செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்கள் பருகூர் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தபோது 27.08.1993 அன்று நான்கு வேலைவாய்ப்பு பட்ட படிப்புகளுடன் ( Job-oriented Courses) கல்லூரி, பருகூர் அரசு மகளிர் மேல் நிலை பள்ளி வளாகத்தில், பெற்றோர் ஆசிரியர் கழக கட்டிடத்தில் துவக்கப்பட்டது.

1999 ஆம் ஆண்டு பருகூர் to சென்னை தேசிய நெடுஞ்சாலை ஒட்டி அங்கிநாயனபள்ளி கிராமத்தில் கல்லூரிக்கான, ரூ.90.00 லட்சங்கள் மதிப்பீட்டிலான புதிய கட்டிடம் திறக்கப்பட்டு, கல்லூரி புதிய கட்டிடத்தில் செயல்பட துவங்கியது. கல்லூரி வளாகம் 9.46 ஏக்கர் பரப்பளவை கொண்டு இயற்கை சூழலோடு அமைந்துள்ளது.

1993-94-ல் 1) பி.ஏ. கூட்டாண்மை செயலரியல் 2) பி.எஸ்ஸி. கணினி அறிவியல் 3) பி.எஸ்ஸி. மின்னனுவியல் 4) பி.எஸ்ஸி. மனையியல் ஆகிய நான்கு வேலை வாய்ப்பு சார்ந்த பட்ட படிப்புகளுடன் (Job-oriented Courses) அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பருகூர் என துவக்கம்.

1997-1998-ல் பெற்றோர் ஆசிரியர் கழகம் துவக்கம்.

1999-2000-ல் ரூ.90 லட்சம் மதிப்பீட்டில் அங்கிநாயனபள்ளி கிராமத்தில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தில் கல்லூரி மாற்றப்பட்டது.

2000-2001 –ல் கணினி அறிவியல் படிப்பு பிற துறை மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் கணினி சிறப்பு பயிற்சி திட்டம் (Computer Literacy Programme) துவக்கம்.

<u>2003-2004-ல்</u> 1) பி.சி.ஏ. 2) இளநிலை வணிகவியல் 3) முதுநிலை வணிகவியல் 4) முதுநிலை கணினி அறிவியல் ஆகிய நான்கு சுயநிதி பாடப் பிரிவுகள் துவக்கம்.

<u>2006-2007-ல்</u> சுயநிதி பாடப் பிரிவுகள், முறையான (அரசு) பாடப் பிரிவுகளாக மாற்றப்பட்டது.

<u>2007-2008-ல்</u> கணினி அறிவியல் ஆய்வகம்-1 கட்டிடம் ஒப்படைக்கப்பட்டது.

<u>2007-2008-ல்</u> இரண்டாம் சுழற்சி முறையில் 1) பி.எஸ்ஸி. கணினி அறிவியல் 2) பி.சி.ஏ. ஆகிய பட்ட படிப்புகள் துவக்கம்.

2007-2008-ல் முன்னாள் மாணவர்கள் சங்கம் துவக்கப்பட்டது.

<u>2008-2009-ல்</u> கணினி அறிவியல் ஆய்வகம்-2 கட்டிடம் ஒப்படைக்கப்பட்டது.

<u>2012-2013-ல்</u> ரூ.45 லட்சங்கள் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மின்னனு நூலக கட்டிடம் ஒப்படைக்கப்பட்டது.

<u>2012-2013-ல்</u> 1) எம்.எஸ்ஸி உணவு மற்றும் பத்தியியல் 2) எம்.பில். உணவு மற்றும் பத்தியியல் 3) எம்.பில். கணினி அறிவியல் 4) எம்.பில்.

வணிகவியல் 5) பி.எச்டி. கணினி அறிவியல் ஆகிய பாடப் பிரிவுகள் துவக்கம்.

<u>2013-2014-ல்</u> 1) பி.ஏ. தமிழ் 2) பி.ஏ. ஆங்கிலம் 3) பி.எஸ்ஸி. கணிதம் 4) பி.எஸ்ஸி. இயற்பியல் ஆகிய பாடப் பிரிவுகள் துவக்கம்.

<u>2015-2016-ல்</u> IVDP தொண்டு நிறுவனர் <u>திரு. குழந்தை பிரான்ஸிஸ்,</u> கிருஷ்ணகிரி அவர்களின் <u>ரூ. 10 லட்சம்</u> பங்களிப்புடன், <u>ரூ. 30 லட்சங்கள்</u> மதிப்பீட்டில் 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கலையரங்கம் (Auditorium) ஒப்படைக்கப்பட்டது.

2016-2017-ல் அண்ணா நூற்றாண்டு நினைவு கட்டிடம் ரூ.______ திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டிடம் ஒப்படைக்கப்பட்டது.

2016-2017-ல் IVDP தொண்டு நிறுவனர் திரு. குழந்தை பிரான்ஸிஸ், கிருஷ்ணகிரி அவர்களின் ரூ. 10 லட்சம் பங்களிப்புடன், ரூ. 30 லட்சங்கள் மதிப்பீட்டில் 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கலை மற்றும் அறிவியல் கருத்தரங்க கூடங்கள் (Seminar Halls) ஒப்படைக்கப்பட்டது.

2017-2018-ல் 1) எம்.ஏ. தமிழ் 2) எம்.ஏ. ஆங்கிலம் 3) எம்.எஸ்ஸி. கணிதம் 4) எம்.எஸ்ஸி. இயற்பியல் 5) எம்.பில். தமிழ் 6) எம்.பில். ஆங்கிலம் ஆகிய பாடப் பிரிவுகள் துவக்கம்.

2018-2019-ல் 1) பி.காம் (க & நி) 2) பி.எஸ்ஸி. வேதியியல் 3) எம்.பில். கணிதம் 4) பி.எச்டி. ஆங்கிலம் ஆகிய பாடப் பிரிவுகள் துவக்கம்.

2018-2019-ல் ரூ.227 லட்சங்கள் மதீப்பீட்டில் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு நினைவு கட்டிடம் ஒரு ஆய்வகம் மற்றும் 12 வகுப்பறைகளுடன் கட்டி முடிக்கப்பட்டு, ஒப்படைக்கப்பட்டது.